Registered as a News Paper நல்லூர் இன நூலகம் பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00


# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 23 (07-01-1993) வியாழக்கிழமை ஓசை 324


## நிவாரண திட்டத்திற்கு ஜேர்மன் அரசு உதவி

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத் திட்டத்திற்கு ஜேர்மன் அரசு சுமார் 113 மில்லியன் ரூபா வழங்கவுள்ளது. யாழ். மாவட்டத்தில்இடம்பெயர்ந்த மக்களிற்கு நிவாரணமளிப்பதற்காகயாழ்.செயலக புனர்வாழ்வுப்பிரிவும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமும் இணைந்து தயாரித்துள்ள திட்டத்தை செயற்படுத்த இந் நிதிபயன்படுத்தப்படும்.

(ஜெட் விமானங்கள் அனர்த்தம்)

# சித்தன்கேணியில் கோர சம்பவம்

# 10 பொதுமக்கள் உடல்சிதறி மரணம்

## 20 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணியில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப் படையினரின் "சுப்பர்சொனிக்" விமானங்கள் சரமாரியான றொக்கட் தாக்குதல் நடாத்தியுள்ளன. இந்த றொக்கட் தாக்குதலில் சுமார் பத்து அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர் இருபதுக்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 10 05 மணியளவில் குடாநாட்டின் வான் பிராந்தியத்திற்குள் புகுந்து கொண்ட இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் பேரிரைச்சலுடன் பல தடவை வட்டமிட்டன.

தொடர்ந்து வலிகாமம் மேற்குப் பகுதியை குறியாகக் கொண்டு அங்குமிங்குமாக வானத்தைக் கிழித்துக் கொண்டு பறந்தன பின்னர் திடீரென சித்தன்கேணிப் பிள்ளையார் ஆலயத்துக்கு தெற்குப் புறமாக உள்ள சுமார் அரை மைல் தூரம்வரை காணப்படும் பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது பரவலான றொக்கட் தாக்குதல்களைத் தொடுத்தன.

வான வெளியில் சுற்றிச் சுழன்றுகொண்டிருந்த இரு சுப்பர்சொனிக் விமானங்களும் வெவ்வேறு திசைகளில் பறந்து இத்தாக்குதல்களைத் தொடுத்தன. இரு விமானங்களும் மாறிமாறி தாக்குதல் நடாத்தியதனால் மேற்படி குடியிருப்புகள் மீது தொடர்ச்சியாக றொக்கட் குண்டுகள் வீழ்ந்து வெடித்தவண்ணமிருந்தன.

இத்தாக்குதல் காரணமாக மேற்படி பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள், அரிசி ஆலை ஒன்றில் நின்றவர்கள் மற்றும் வீடுகளில் தங்கியிருந்தவர்கள் என பல பொதுமக்கள் கொல்லப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)



சித்தன்கேணியில் சிறிலங்கா விமானப்படை "சுப்பர் சொனிக்" விமானங்கள்நடத்திய கோரத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒருவரின் சடலத்தை படத்தில் காணலாம்.

## விமானம் சென்றதும் எழுந்து பார்த்தேன்

# பலர் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துகொண்டிருந்தனர்

# நாச சக்திகள் குறித்து

# 10 பொதுமக்கள் உடல்சிதறி மரணம்

## 20 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணியில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப் படையினரின் "சுப்பர்சொனிக்" விமானங்கள் சரமாரியான றொக்கட் தாக்குதல் நடாத்தியுள்ளன. இந்த றொக்கட் தாக்குதலில் சுமார் பத்து அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர் இருபதுக்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 10.05 மணியளவில் குடாநாட்டின் வான் பிராந்தியத்திற்குள் புகுந்து கொண்ட இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் பேரிரைச்சலுடன் பலதடவை வட்டமிட்டன.

தொடர்ந்து வலிகாமம் மேற்குப் பகுதியை குறியாகக் கொண்டு அங்குமிங்குமாக வானத்தைக் கிழித்துக் கொண்டு பறந்தன பின்னர் திடீரென சித்தன்கேணிப் பிள்ளையார் ஆலயத்துக்கு தெற்குப் புறமாக உள்ள சுமார் அரை மைல் தூரம்வரை காணப்படும் பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது பரவலான றொக்கட் தாக்குதல்களைத் தொடுத்தன.

வான வெளியில் சுற்றிச் சுழன்றுகொண்டிருந்த இரு சுப்பர்சொனிக் விமானங்களும் வெவ்வேறு திசைகளில் பறந்து இத்தாக்குதல்களைத் தொடுத்தன. இரு விமானங்களும் மாறி மாறி தாக்குதல் நடாத்தியதனால் மேற்படி குடியிருப்புகள் மீது தொடர்ச்சியாக றொக்கட் குண்டுகள் வீழ்ந்து வெடித்தவண்ணமிருந்தன.

இத்தாக்குதல் காரணமாக மேற்படி பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்தவர்கள், அரிசி ஆலை ஒன்றில் நின்றவர்கள் மற்றும் வீடுகளில் தங்கியிருந்தவர்கள் என பல பொதுமக்கள் கொல்லப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)



சித்தன்கேணியில் சிறிலங்கா விமானப்படை "சுப்பர் சொனிக்" விமானங்கள்நடத்திய கோரத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒருவரின் சடலத்தை படத்தில் காணலாம்.

### விமானம் சென்றதும் எழுந்து பார்த்தேன்

## பலர் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துகொண்டிருந்தனர்

[யாழ்ப்பாணம்]

"இரண்டு விமானங்களும் இரண்டு பக்கங்களிலும் நின்று சரமாரியாக குண்டுகளைப் பொழிந்து தள்ளின. தப்பியோடுவதற்கு வழியில்லாமல் தரையில் விழுந்து படுத்தேன் விமானங்கள் விலகிச் சென்றதும் எழுந்து பார்த்தேன் அருகில் நின்றவர்கள் அனைவரும் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்தனர்." இவ்வாறு சித்தன்கேணி முரளி அரிசி ஆலைக்கு முன்னால் வீழ்ந்து வெடித்த றொக்கட் குண்டுகளில் இருந்து மயிரிழையில் உயிர்தப்பிய ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பலத்த உறுமல் ஒலியுடன் வட்டமிட்ட இரு விமானங்களில் இருந்தும் மாறி மாறி சரமாரியாக றொக்கட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இரண்டு அல்லது மூன்று குண்டுகள் மேற்படி அரிசி ஆலைக்கு முன்னால் வீழ்ந்து வெடித்தன இவ் அரிசி ஆலைக்கு முன்னால் நின்றவர்களில் ஒருவர் எனது கண் முன்னாலேயே உடல் சிதறுண்டு அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். ஏனைய

(6-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி படகு படுகொலைகள்

## விடுதலைப் புலிகள் கண்டனம்

கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தமது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர் இவ் ஒருபக்க கண்டன அறிக்கையில் அப்பாவித் தமிழர்கள் மீதுசிறிலங்கா கடற்படை புரிந்த படுகொலை இது என்று இந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

மேலும் இது குறித்து தெரிவிக்கையில்;

இத்தகைய மிருகத்தனமான தாக்குதல்கள் தாம் திறந்தே வைத்திருக்கும் சமாதானக் கதவுகளை மூடச் செய்யும் என்றும், அது இன்றைய சமாதான முயற்சிகளைத் தடுக்கும் என்றும், இத்தகைய பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அரசு நிறுத்திக் கொண்டால் மட்டுமே சமாதானத்துக்கான சூழ்நிலை உருவாகும் எனவும் புலிகள் தமது அறிக்கையில் கூறியுள்ளனர்.

அதேசமயம் தமிழ் அரசியல் வாதிகள் இந்தப் படகுத் தாக்குதல் சம்பவங்களிலே மேலும் ஐம்பதுபேர் காணாமற் போய்விட்டார்கள் என்றும் அநேகமாக இவர்கள் இறந்திருக்கலாம் என்றும் குறிப்பிடுகிறார்கள். அதேசமயம் இந்தத் தாக்குதலை அடுத்துப் பதின்நான்குமனித சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த உயிர் இழப்புக்கள் தொடர்பாக விசாரணைக் குழு ஒன்றை நியமிக்குமாறு தமிழ் அரசியல் வாதிகள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்கள். அதற்கான பதிலை அவர்கள் ஜனாதிபதியிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## நாச சக்திகள் குறித்து அவதானமாக இருக்கவும்

### விடுதலைப் புலிகள் கோரிக்கை

(நமது நிருபர்)

தமிழீழ மக்கள் விழிப்பாகவும், எச்சரிக்கையுடனும், மிகுந்த அவதானத்துடனும் இருந்தால் சிறிலங்கா இன வெறியருக்குத் துணைபோகும் நாசகார சக்திகளை ஒழித்து விடலாம் என விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. பொற்கோ தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கடந்த திங்கள் இரவு கோப்பாயில் நடைபெற்ற கைக்குண்டு வீச்சு தொடர்பாக அவர் விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அம்மாநாட்டில் அவர் இது பற்றி மேலும் விளக்குகையில்;

மேற்படி கைக்குண்டு வீச்சு சம்பவம் நடைபெறுவதற்கு முன் நான்கு தினங்களாக சந்தேக நபர் அப்பகுதிகளில் நடமாடி நோட்டமிட்டுத் திரிந்ததை அப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் அவதானித்துள்ளனர். இதேவேளை இந்நபரது நடமாட்டத்தில் சந்தேகம் கொண்டுள்ளனர். ஆனால் அதுபற்றிய தகவல்களை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற சிந்தனை அவர்கள் மத்தியில்

(6-ம் பக்கம் பார்க்க)

## வாகனங்களை பதிவு செய்ய புலிகள் வேண்டுகோள்

(நமது நிருபர்)

தமிழ்ப்பகுதிகளில் தேச விரோத சக்திகளின் செயல்களை ஒழிக்கும் பொருட்டு முன்னெசரிக்கை நடவடிக்கைகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. பொற்கோ தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ்.மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இது பற்றி அவர் மேலும் விளக்குகையில் சகல வாகனங்களும் இனிமேல் பதிவு செய்யப்படல் வேண்டும். விற்பனை நிலையங்கள் வாகனங்களை விற்பனை செய்யும்போது அதற்குரிய ரசீதில் வாகனத்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அணியத்திற்குள்பதுங்கியதால் உயிர் தப்பி பிழைத்தேன்

(வவுனியா)

அணியத்திற்குள் நாம் மறைந்திருந்ததை காணாத கடற்படையினர் எமதுபடகில் வந்த ஏனையோரை சுட்டு விட்டு தமது படகுடன் எமது படகை இணைத்துக் கட்டிக் கொண்டு இழுத்துச் சென்ற சமயம் எமது படகின் இணைப்பு அறுந்து விட்டது. இதனால் நாம் தப்பிவந்தோம்.

கடந்த இரண்டாம் திகதி இரவு கிளாலி கடல் ஏரிப்பகுதியில் கடற்படையினரின் தாக்குதலிலிருந்துதப்பி வந்த இருவர் இத் தகவலை தெரிவித்தனர்

சுப்பிரமணியம் சுந்தரசிவம் [வயது 31], சின்னத்துரை விமலாதேவி [வயது 37] ஆகிய இருவரும் பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள். தற்போது மானிப்பாயில் உள்ள அகதிமுகாமில் வசிக்கிறார்கள் இவர்களுடன் பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த நடராஜா ரோகினிதேவி என்கிற இளம் குடும்பப் பெண் ஒருவரும் காயத்துடன் தப்பி வவுனியா வந்து சேர்ந்தார். இவர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவர்கள் மேலும் தகவல் தரும் போது கிளாலி கடல் பகுதியில் தமது படகுடன் பல படகுகள் ஆலங்கேணி பகுதியை நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் நடுக் கடலில் வைத்து கடற்படையினர் பயணிகளின் படகுகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந்த வேளையில் எமது படகுக்கு அருகாமையில் வந்து கொண்டிருந்த அனைத்து பயணிகள் படகுகளும் சிதறி ஓடின.

சற்று நேரத்திற்கு பின்னர் எமது படகை நோக்கி வெளிச்சம் பாய்ச்சிய படி வந்த கடற்படையினர் எமது படகை நோக்கி கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எமது படகில் வந்த நீந்தத் தெரிந்தவர்கள்கடலில்குதித்து விட்டனர் நாம் அணியத்திற்குள் இருந்த பொருள்களை வெளியே வைத்துவிட்டு அணியத்திற்குள் புகுந்துவிட்டோம் எம்மை காணாத கடற்படையினர் எமது படகுடன் வேறு இரு படகுகளையும் இணைத்துக் கட்டிக் கொண்டு இழுத்துச் சென்ற சமயம் எமது படகின் இணைப்பு அறுந்துவிட்டது.

இதன் பின்னர் கடலில் மிதந்து கொண்டிருந்த எமது படகை படகு ஓட்டிகள் இழுந்துவந்து எம்மை ஆலங்கேணி பகுதிக்குகொண்டுவந்து சேர்த்தனர்.

நாம் அறிந்தவரையில் நாம் மூன்று பேர் மட்டுமே தப்பி வந்துள்ளோம் என்றார்.

# அமைச்சர் செல்லச்சாமியின் எரிபொருள் மோசடி

(கொழும்பு)

அமைச்சர்களின் வாகனங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக பயன்படுத்தப்படும் இலவச சலுகையைப் பயன்படுத்தி ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி, தமது தனிப்பட்ட வாகனங்களுக்கு 71,609 ரூபாவிற்கு எரிபொருள் நிரப்பியிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் செல்லச்சாமி பயன்படுத்தும் ஆறு பிரத்தியேக வாகனங்களுக்கும் இலவச சலுகையைப் பயன்படுத்தினார் என்றும், இதையடுத்து இவருக்கான கட்டணையைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மீளப் பெற்றிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## வரி விளம்பரம்

### உடன் தேவை

பாடுநிலா இசைக்குழுவிற்கு ஓர்கன் வாசிப்பதில் நல்ல தேர்ச்சியுள்ளவர் உடன் தேவை தொடர்பு: 'பாடுநிலா' 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3922)

### வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு உதவும் தமிழ் ஆண்டு 5 செயல் நூல் வெளிவந்து விட்டது. விரிவான விளக்கங்கள், பயிற்சிகள் கொண்டது ஆக்கம் த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3917)

### சங்கீதம்

வட இலங்கைச் சங்கீதசபை இரண்டாந்தரப் பரீட்சை பாடத் திட்டத்திற்கமைய சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த "சங்கீதம் - வினா விடை" அனைவர்க்கும் பயன்படும். எங்கும் கிடைக்கும். (3913)

### சித்திரம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சித்திரம் கற்போருக்கும், வட-இலங்கை நுண்கலை மன்றப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் உதவும் சித்திரம் வினா—விடை விற்பனையாகிறது. ஆக்கம்: த. சிவயோகலிங்கம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3918)

### விற்பனையாகிறது

இலகு ஆங்கிலம் (English Made Easy) ஆண்டு 4, 5, 6 ரூபா 19-50 மாற்றம் மக்கள் சஞ்சிகை ரூபா 10-00. தமிழ்த் தென்றல் — யாதுமூரானின் கவிதைகள் ரூபா 20-00. பிரபலபுத்தகசாலைகளில் கிடைக்கும். (3919)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)

# அறிவித்தல்

## கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவு

பின்வரும் கிளைகளுக்கு கீழ் குறிப்பிடப்படும் கிளை நிலையத்தில் 28 - 11 - 92 ஆம் திகதி நடைபெற்ற நியமனப் பத்திரத் தாக்கலின்போது தெரிவுசெய்யப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்களுள் கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

| கிளை இல | உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறும் கிளைநிலையம் | காலம் |
|---|---|---|
| 1) 24 ஏழாலை தெற்கு | 24 ஏழாலை மேற்கு | 10-1-93 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 2 00மணி |
| 2) 26 திடற்புலம் | 19, ஈவினை | ,, ,, 3.30மணி |
| 3) 30 புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 19, ஈவினை | ,, ,, 4.30மணி |

சகல உறுப்பினர்களுக்கும் தனித்தனி நிகழ்ச்சி நிரல் உரிய முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தவிர்க்க முடியாத காரணத்தால் நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாதவர்கள் இவ் அறிவித்தலை ஏற்று குறித்த தினத்தன்று குறித்த கிளைக்கு சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம் பல நோ, கூ. சங்கம்
சுன்னாகம்
05-01-93

செயலாளர்

(சி-5713)

செஞ்சோலை மகளிர் பாடசாலைக்கு

# பெண் ஆசிரியர்கள் தேவை

1) விஞ்ஞானம்
2) கணிதம்
3) உடற்கல்வி
4) ஆங்கிலம்

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி ரதிலஷ்மி ஆனந்தகுமாரசுவாமி

(முன்னைநாள் அதிபர், ஆசிரியபயிற்சிக் கலாசாலை கோப்பாய்)

5-1-1993 அன்று சிவபதமெய்திய எமது முன்னைநாள் அதிபருக்கு எமது ஆத்ம அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பயிற்சி ஆசிரியர்கள்
ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

(3946)

# நினைவு கூருகின்றோம்...

## 1993-01-07

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம், கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் பாறூக் [அகமது லெப்பை முகமது கனிபா- அக்கரைப்பற்று - அம்பாறை]

சீலன் [தங்கையா சிவகுமார் - புதிய குடியிருப்பு, பொம்மைவெளி நாவாந்துறை-யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளை வேவு பார்க்கச் சென்ற சமயம் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

★ ராதா [அடைக்கலம் தங்கராசா - சிசுவமடு ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு]

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - முங்கிலாற்றுப்

கத ஆசானயை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த ''சங்கீதம்-வினா விடை'' அனைவர்க்கும் பயன்படும். எங்கும் கிடைக்கும். (3913)

## சித்திரம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சித்திரம் கற்போருக்கும், வட-இலங்கை நுண்கலை மன்றப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் உதவும் சித்திரம் வினா—விடை விற்பனையாகிறது. ஆக்கம்: த. சிவயோகலிங்கம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3918)

## விற்பனையாகிறது

இலகு ஆங்கிலம் (English Made Easy) ஆண்டு 4, 5, 6 ரூபா 19-50 மாற்றம் மக்கள் சஞ்சிகை ரூபா 10-00. தமிழ்த் தென்றல் — யாதுமூரானின் கவிதைகள் ரூபா 20-00. பிரபலபுத்தகசாலைகளில் கிடைக்கும். (3919)

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (ஜி-5679)

## 7-D பெற்றார்

தமிழீழபொதுக்கல்வித்தேர்வில் யாழ்இந்துமகளிர்கல்லூரியைச்சேர்ந்த செல்விசிவராசா அரவிந்தி 7 D யும் 1 C யும் பெற்றார். இவர் யாழ் கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலய ஆசிரியரும்; வேலணை சோதிடர் திரு V. A சிவராசாவினதும் ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க. சிவராசா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும் ஆவார். (3945)

## பலாலியில் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் வெளியிடப்பட்ட க. பொ. த. (உ/தர)ப் பரீட்சையின் பெறுபேறுகளில் யாழ். குடாநாட்டுப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் பலாலி விமான நிலையத்திற்கு எடுத்துவரப் பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

---

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)

# அறிவித்தல்

## கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவு

பின்வரும் கிளைகளுக்கு கீழ் குறிப்பிடப்படும் கிளை நிலையத்தில் 28 - 11 - 92 ஆம் திகதி நடைபெற்ற நியமனப் பத்திரத் தாக்கலின்போது தெரிவுசெய்யப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்களுள் கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

| கிளை இல | உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறும் கிளைநிலையம் | காலம் |
|---|---|---|
| 1) 24 ஏழாலை தெற்கு | 24 ஏழாலை மேற்கு | 10-1-93 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 2 00மணி |
| 2) 26 திடற்புலம் | 19, ஈவினை | ,, ,, 3.30மணி |
| 3) 30 புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 19, ஈவினை | ,, ,, 4.30மணி |

சகல உறுப்பினர்களுக்கும் தனித்தனி நிகழ்ச்சி நிரல் உரிய முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தவிர்க்க முடியாத காரணத்தால் நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாதவர்கள் இவ் அறிவித்தலை ஏற்று குறித்த தினத்தன்று குறித்த கிளைக்கு சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம் பல நோ, கூ. சங்கம்
சுன்னாகம்
05-01-93

செயலாளர்

(ஜி-5713)

---

செஞ்சோலை மகளிர் பாடசாலைக்கு

# பெண் ஆசிரியர்கள் தேவை

1) விஞ்ஞானம் 2) கணிதம்
3) உடற்கல்வி 4) ஆங்கிலம்
5) ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் 6) இலிகிதர்

அறிவுறுத்தல்கள்:-

1. கணிதம் - க. பொ. த. (உயர்தரம் - கணிதம்) குறைந்தது மூன்று பாடங்களிலாவது சித்தியெய்தி இருக்க வேண்டும்.
2. விஞ்ஞானம்- க. பொ. த. (உயர்தரம்) - உயிரியல்) குறைந்தது மூன்று பாடங்களிலாவது சித்தியெய்தி இருக்க வேண்டும்.
3. ஏனைய ஆசிரியர்கள்- எத்துறையில் சரி க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களிலாவது சித்தியெய்தி இருக்க வேண்டும்.
4. ஆங்கிலக் கல்வி ஆசிரியர்- குறைந்தது க. பொ. த (உயர்தரம்) ஆங்கிலம் சித்தியெய்தியவர்களாக, அல்லது ஆங்கிலகதில் விசேட வேறு தகைமைகள் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.
5. இலிகிதர்கள்- தட்டச்சு, சுருக்கெழுத்து, தெரிந்திருத்தல் அவசியம்,

### நேர்முகத் தேர்வு

காலம்

| | | | |
|---|---|---|---|
| 09 - 01 - 1993 — | காலை — | 8.30 — | உடற்கல்வி ஆசிரியர்கள் |
| | மாலை — | 2.00 — | ஆங்கிலம் |
| 10 - 01 - 1993 — | காலை — | 8.30 — | ஆரம்பக்கல்வி |
| | — மாலை — | 2.00 — | இலிகிதர் |
| 11 - 01 - 1993 — | காலை — | 9.00 — | கணித ஆசிரியர்களுக்கானது |
| 12 - 01 - 1993 — | காலை — | 9.00 — | விஞ்ஞான ஆசிரியர்களுக்கானது- |

இடம்:-
திருநெல்வேலி - முத்துத்தம்பி ஆரம்பபாடசாலைக்கு அருகாமையிலுள்ள மகளிர் அலுவலக,
நேர்முகத் தேர்வு;- உங்களது சகல சான்றிதழ்கள் அந்தாட்சிப் பத்திரங்களுடன் குறிக்கப்பட்ட திகதியில் நேரில் சமுகமளிக்கவும். (ஜி-5716)

---



## திருமதி ரதிலஷ்மி ஆனந்தகுமாரசுவாமி

(முன்னைநாள் அதிபர், ஆசிரியபயிற்சிக் கலாசாலை கோப்பாய்)

5-1-1993 அன்று சிவபதமெய்திய எமது முன்னைநாள் அதிபருக்கு எமது ஆத்ம அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பயிற்சி ஆசிரியர்கள்
ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

(3946)

---

# நினைவு கூருகின்றோம்...
## 1993-01-07

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம், கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் பாறூக் [அகமது லெப்பை முகமது கனீபா- அக்கரைப்பற்று - அம்பாறை]

சீலன் [தங்கையா சிவகுமார் - புதிய குடியிருப்பு, பொம்மைவெளி நாவாந்துறை-யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளை வேவு பார்க்கச் சென்ற சமயம் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

★ ராதா [அடைக்கலம் தங்கராசா - கீசுவமடு ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு]

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - மூங்கிலாற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

லெப். மரிக்கார் [சின்னத்தம்பி கருணாநிதி - கும்பாவெளி, மந்துவில், கொடிகாமம்-யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்.

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கியதில் எமைப் பிரிந்த -

லெப். மதி [விஸ்வலிங்கம் செல்வேந்திரன் - கங்குவேலி, மூதூர் - திருக்கோணமலை]

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - மணியந்தோட்டத்தில், எமது பயிற்சி முகாமொன்றில் நெஞ்சுவலி காரணமாக எமைப் பிரிந்த -

நிகன் (கனகர் மகாதேவன் - புத்தூர் மேற்கு, நீர்வேலி - யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-5714]

## தாண்டிக்குளத்தில் லொறிகள் மீண்டும் ஒரு முறை சோதனை

(வவுனியா)

தடை செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்ற தகவலின் பேரில் மூன்று லொறிகள் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டன.

கடந்த இரண்டாம் திகதி இராணுவத்தின சோதனையை அடுத்து தாண்டிக்குளம் நோக்கி வந்துகொண்டிருந்த மேற்படி லொறிகளிலேயே தடைப்பொருள்கள் மறைத்துக்கொண்டு செல்லப்படுகின்றன என்று தகவல் கிடைத்ததாம். இதன்பின்னர் மறுபடியும் அந்த லொறிகளை சோதனைக்கு உட்படுத்தியபோது குறிப்பிட்ட பொருள்கள் எவையும் ஏற்றிச் செல்லப்படாததால் மீண்டும் அந்த லொறிகள் வடக்கு நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டதாம். (தி)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்
29 - 05 - 1972



வீரச்சாவு
24 - 11 - 1992

**லெப். திருவருள்** (சீலன் சிறப்புப்படை)
**(சின்னத்துரை கிருஷ்ணானந்தன்)**
**07-01-93**

தாயகமாம் தமிழீழம் காணவேண்டித்
தன்னுயிரை அர்ப்பணித்த தியாக வீரன்
மானமே உயிராக மதித்த வீரன்
மண்மீட்புப் போர்புகுந்த வேங்கை வீரன்
கொற்றம்நிறை குடமியன் தந்தவீரன்
சோதிலால் கிருஷ்ணானந்தன் என்னும் வீரன்

எமது இல்லத்தில் 07-01-93 இன்று நடைபெறும்மதிய போசனத்திலும் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள் நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குடமியன்,
வரணி.

குடும்பத்தினர்

[3935]

## செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான செய்முறைப் பரீட்சை 9ஆம், 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. நடுவர் பயிற்சிக்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களை 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு சமுகம் அளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

## தினமும் 20 லொறிகளுக்கே அனுமதி

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரியகுளம் வாகன சோதனை முகாமிலிருந்து தினம் ஒன்றிற்கு இருபதிற்கு மேற்படாத லொறிகளை பொருள்களுடன் அனுப்பி வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

பொதுஸ்தாபனங்களின் லொறிகளாக இருந்தாலும் தனியார் லொறிகளாக இருந்தாலும் இருபது வரையிலான லொறிகளை மட்டும் வடபகுதி நோக்கி அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக லொறிகளை வடக்கு நோக்கி அனுப்பி வைக்கப்படுவதனால் தடைப் பொருள்கள் சோதனைக்கு உட்படுத்த முடியவில்லையாம்.

வடபகுதிக்கு ஏற்றிச்செல்லப் படும் பொருள்களின் அளவை மட்டுப்படுத்தும் நோக்குடனேயே அரசாங்கம் இப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (தி)

# பல்கலை. குழப்பத்திற்கு ஜே. வி. பியே காரணமாம்

[கொழும்பு]

கொழும்பு, களனி பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட தென்பகுதிப் பல்கலைக் கழகங்களில் இப்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு ஜே. வி. பி. இயக்கம் தான் காரணமென்று புலனாய்வு அறிக்கையிலிருந்து தெரிய வருவதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கூறுகின்றன.

லண்டன், தென் இந்தியா, றோம், ஆகிய இடங்களில் இரகசிய மையங்களைவைத்து இயங்கும் தற்போதைய ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்காவின் ஆதரவாளர் பல்கலைக் கழகங்களில் கலகங்களை ஏற்படுத்தியுள்ளதாக புலனாய்வு அறிக்கைகளை மேற்கோள் காட்டி லங்காபுவத் செய்தி வெளியிட்டுள்ளது.

சோமவன்ச அமரசிங்க நாட்டை விட்டுத் தப்பியோட உதவி செய்ததாகச் சந்தேகிக்கப்படும் இளம் இராணுவ அதிகாரி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

புத்திஜீவிகளையும், மற்றவர்களையும் ஒன்றுதிரட்டி மூன்றாவது எழுச்சி ஒன்றுக்கு ஜே வி பி. திட்டமிட்டுள்ளதாகவும், கட்சிக்கு நிதி திரட்டும் பணியில் கொள்ளைகளில் ஈடுபடும்படி ஜே. வி. பி. அணியினருக்குப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜே. வி. பி. எழுச்சி மறுபடியும் தலைதூக்குவதைச் சமாளிக்கப் பொலிஸ் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 45ஆம் நாள் நினைவலைகள்

**மேஜர் தமிழரசன் [டொச்சன்]**
(கந்தசாமி ஜெயக்குமார்)
புன்னாலைக்கட்டுவன் வடக்கு

வீரப்பிறப்பு **21.06.1966**

வீரச்சாவு **24.11.1992**



## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரஉதயம்
05



வீரச்சாவு
24



## லெப். திருவருள் (சிலன் சிறப்புப்படை)
**(சின்னத்துரை கிருஷ்ணானந்தன்)**

**07-01-93**

தாயகமாம் தமிழீழம் காணவேண்டித்
தன்னுயிரை அர்ப்பணித்த தியாக வீரன்
மானமே உயிராக மதித்த வீரன்
மண்மீட்புப் போர்புகுந்த வேங்கை வீரன்
கொற்றம்நிறை குடமியன் தந்தவீரன்
சோதிலாக் கிருஷ்ணானந்தன் என்னும் வீரன்

எமது இல்லத்தில் 07-01-93 இன்று நடைபெறும் மதிய போசனத்திலும் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள் நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குடமியன்,
வரணி.

குடும்பத்தினர்
[3935]

களை லொறிகளுடன் அனுப்பி வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

பொதுஸ்தாபனங்களின் லொறிகளாக இருந்தாலும் தனியார் லொறிகளாக இருந்தாலும் இருபது வரையிலான லொறிகளை மட்டும் வடபகுதி நோக்கி அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக லொறிகளை வடக்கு நோக்கி அனுப்பி வைக்கப்படுவதனால் தடைப் பொருள்கள் சோதனைக்கு உட்படுத்த முடியவில்லையாம் வடபகுதிக்கு ஏற்றிச்செல்லப் படும் பொருள்களின் அளவை மட்டுப்படுத்தும் நோக்குடனேயே அரசாங்கம் இப் புதிய திட்டத்தை நடைமுறைபபடுத்த உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (இ)

# 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரஉதயம்
05 — 06 — 1974



வீரச்சாவு
24 — 11 — 1992

## லெப்டினன்ட் தேனருவி (ரஜித்தா)
**(மீரா ராமச்சந்திரன்)**

(பலாலி இராணுவ முகாம் மீதான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

மண்ணோடு மக்களும் மீட்சி பெறுதலெனும்
எண்ணம் கொண்டதனால் எம் - மீரா
தேனருவி ஆகிச் சென்றாள் போர்முகத்து
இன்னுயிரை தந்து சிந்தையில் நிறைந்தாள்
தாயக விடியலைத் தாகமாய் கொண்டே
பாயும் புலியாகப் படைநடுவில் சென்றவளே!
தோயுறோம் உன்நினைவில்! தொடர்கிறோம் உன்பணியை!
ஓயுதல் செய்வோம் என்றே ஏற்கிறோம் ஒரு சபதம்

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.
(பழைய பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்பாக)

அப்பா, அம்மா,
மற்றும் உற்றார், உறவினர்.
[சி-5717]

வீரப்பிறப்பு
**21.06.1966**

வீரச்சாவு
**24.11.1992**



தங்கமாம் தமிழ்மண்ணை தயங்காமல் காத்திடவே
தமிழ் மண்ணில் பிறந்த தமிழரசன் நீயன்றோ!
எம் மண்ணாம் தமிழ்மண்ணை எதிரியிடம் மீட்டெடுக்க
எழுந்திட்டாய் புயலாக! பாய்ந்திட்டாய் புலியாக
புறப்பட்டாய் படையோடு, பலாலி தளம் நோக்கி
சீற்றம் கொண்டது உன் துப்பாக்கி ரவைகள்
படையினர் மாண்டனர் வீழ்ந்தன அரண்கள்
களம் பல கண்டு சாதனை புரிந்து
காவிய நாயகனாய் கனிந்துவரும் வேளையிலே
வீழ்ந்தது உன் உடல் பிரிந்தது உன் உயிர்
நீ சிந்திய குருதியால் சிவந்த எம் மண் மேலும் சிவந்தது
நான் வளர்த்த தவக்கொழுந்தே! டொச்சனே!
நீ ஈழத்துச் சரித்திரத்தில் என்றுமே நிலைத்திருப்பாய்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் நினைவு அஞ்சலியிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும் நண்பர்களையும் உறவினர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
(3940)

அம்மம்மா (க. அன்னம்மா)
சகோதரர்கள், உறவினர்கள்
நண்பர்கள்

## கல்வாரி பாலர் பாடசாலை

எமது பாலர் பாடசாலை மீண்டும் 11-01-1993 திங்கட்கிழமை ஆரம்பமாகும். இப் பாடசாலையில் தங்கள் பிள்ளைகளை சேர்க்க விரும்பும் பெற்றோர்களே! 11 01-1993 இற்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

நிர்வாகி
கல்வாரி பாலர்பாடசாலை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(3944)

## 45-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 1974 | 1992 |
| — | — |
| 10 | 11 |
| — | — |
| 31 | 24 |



### 2ஆம் லெப். ஜீவராணி
### [பத்மநாதன் நந்தினி (கண்ணா)]

அன்பு செல்வமே!
''பூந்தோட்டம் வாழ்க்கை இல்லை
போராட்டம் தான் வாழ்க்கை என்று சொன்னாய்
- இப்போ
போர்க் களத்தில் உன் உயிரை
தியாகம் செய்தாய்''

இன்று 7-1-93 வியாழக்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டியில் உற்றார், உறவினர், நண்பர்கள் போராளிகள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
அப்பா (சவூதி), அம்மா தம்பிமார்.

(3826)

## பெற்றுக் கொள்ளவும்

வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகள் சில எமது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பேதுறு அலோஷஸ் நாராந்தனை) வைத்தியநாதன் (பாண்டியன் குளம்) சிவப்பிரகாசம் சாந்தமலர் (அத்தியடி) நவரட்ணசாமி சிவசோதிலிங்கம் (பொலிகண்டி) சின்னையா இராசையா (கட்டுடை), செல்வராணி இராசையா (யாழ்ப்பாணம்) உரியவர்கள் எமது காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## வீரமகனே.. அண்ணனே... நண்பனே!



### கப்டன் வீமன்
### (நாகையா சுப்பிரமணியம்)

(சாவகச்சேரி வடக்கு)

| மண்ணில்: | மண்ணிற்காக தியாகம் |
|---|---|
| 07.04.1965 | 25.11.1992 |

''வீமன் வருவான்'' என விருப்புடனே நாம் பார்த்திருக்க
வீறுடன் பகைவனை அழித்தொழிக்கச் சென்றாய்.
தீரமுடன் போரிட்டாய் - சாதனை செய்தாய் -
எமக்கு வேதனைதந்தாய்
உன்புன்சிரிப்பை தேடுகிறோம் தேடுகிறோம்
தவிக்கின்றோம்
சாவகச்சேரியின் சரித்திர நாயகனே - நீ
சாதனைகள் பலசெய்ததினை இன்றும் கூறுகின்றார் -
மாவீரர்கட்கு மலர்தேடிய மகனே
நீயே மாவீரனாகி விட்டாய்!
வேதனையுடன் விம்முகின்றோம் -
வரலாற்றின் வீரமகனே ... ... ... நீயின்றி நாம்
கலங்குகின்றோம்.

வீமனை மறக்க முடியாத உடன் பிறவாத உற்றாரும், உயிர் நீ என மதிக்கும் போற்றும் நண்பர்களும்.

உரும்பராய் (3943)

## நீங்காத நினைவலையில் 45ஆம் நாள்

| தாயின் மடியில் | தாயக விடிவில் |
|---|---|
| 08 | 28 |
| — | — |
| 08 | 11 |
| — | — |
| 1972 | 1992 |



### கப்டன் கதிரவன்
### (ம. கிரிஸ்ரியன் பெர்னாண்டோ)

இந்த மண்ணில் தான் போராட வேண்டும்
என்று எழுவை தீவினிலே அவதரித்தாயடா .....
அத்தீவை மறந்து விட்டு ஈழமண்ணிற்கு உரமானாயடா

கதிரவன் நீயன்றோ
காலையில் மலர்வாயடா
ஈழத்தில் உன் பணியை
இனிதே முடித்தாயடா.

உன் பாதம் எங்கே வென்று
ஈழ மண்ணும் ஏங்குதடா...
உன் பாதம் நடந்த இடம்
செங்குருதி பாயுதடா......
தமிழ் மண்ணை மீட்கவென்று
''கதிரவனாய்'' மலர்ந்தாயடா
கதிரவனான உனைக் கண்டு
களிப்புற்ற ஈழ மண்ணும்
கதிரவனின் ஒளி இன்றி
உன் குருதி காயவில்லை
எழுவை தீவில் நீ பிறந்தாயடா
எழுந்தமிழர் வாழவென்று
உன் மண்ணை காக்க வென்று
உன் உயிரை ஈய்ந்தாயடா
மாவீரர் வழி என்று இவ்
உலகை மறந்தாயடா
உன் மறைவு இப்போது
கதிரோடு சேர்ந்ததடா
உன் பணியை தொடர்வதற்கு
ஓராயிரம் ''கதிரவர்கள்'' உதிப்பாரடா.

உன்பிரிவால் துயருறும்
அன்பு நெஞ்சங்கள்

தீவகம்
(3936)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## 91-ம் நாள் நினைவில்

பிறப்பு: இறப்பு:



## 45-ம் நாள் நினைவஞ்சலி

| வீர ஜனனம்: | வீரச் சாவு: |
|---|---|
| 1973 | 1992 |
| — | — |
| 08 | 11 |



10 — 31



11 — 24

## 2ஆம் லெப். ஜீவராணி

### [பத்மநாதன் நந்தினி (கண்ணா)]

அன்பு செல்வமே!
''பூந்தோட்டம் வாழ்க்கை இல்லை
போராட்டம் தான் வாழ்க்கை என்று சொன்னாய்
- இப்போ
போர்க் களத்தில் உன் உயிரை
தியாகம் செய்தாய்''

இன்று 7-1-93 வியாழக்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டியில் உற்றார், உறவினர், நண்பர்கள் போராளிகள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

அப்பா (சவூதி), அம்மா
தம்பிமார்.

(3826)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அருட்திரு Z.N. குரூஸ் (அ.ம.தி)

மண்ணில் மலர்வு: 8.9.1912


விண்ணில் உயர்வு: 7.12.1992

உடல்கள் சாகின்றது - நினைவுகள் என்றும் சாவதில்லை. நாம் படும் வேதனை அற்பமானது அது அவ விட முடியாத நித்திய மாட்சிமையை தருகின்றது காண்பவற்றை அல்ல காணாதவை மீது நம்பிக்கை கொண்டு வாழ்கின்றோம்.

அருட்தந்தை Z N. குரூஸ் அடிகளாரின் ஆன்ம சாந்திக்காக 7-1-93-ல் இன்று யாழ் புனித யுவானியார் ஆலயத்தில் பி ப 5 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் அவர் தம் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர்கள்.

(சி/5712)



## கப்டன் வீமன்

### (நாகையா சுப்பிரமணியம்)

(சாவகச்சேரி வடக்கு)

மண்ணில்: 07.04.1965

மண்ணிற்காக தியாகம் 25.11.1992

''வீமன் வருவான்'' என விருப்புடனே நாம் பார்த்திருக்க
வீறுடன் பகைவனை அழித்தொழிக்கச் சென்றாய்.
தீரமுடன் போரிட்டாய் - சாதனை செய்தாய் -
எமக்கு வேதனைதந்தாய்
உன்புன்சிரிப்பை தேடுகிறோம் தேடுகிறோம்
தவிக்கின்றோம்
சாவகச்சேரியின் சரித்திர நாயகனே - நீ
சாதனைகள் பலசெய்ததினை இன்றும் கூறுகின்றார் -
மாவீரர்கட்கு மலர்தேடிய மகனே
நீயே மாவீரனாகி விட்டாய்!
வேதனையுடன் விம்முகின்றோம் -
வரலாற்றின் வீரமகனே ... ... ... நீயின்றி நாம்
கலங்குகின்றோம்.
வீமனை மறக்க முடியாத உடன் பிறவாத உற்றாரும்,
உயிர் நீ என மதிக்கும் போற்றும் நண்பர்களும்.

உரும்பராய்

(3943)

## 91-ம் நாள் நினைவில்

பிறப்பு: 09 — 08 — 1972



இறப்பு: 08 — 10 — 1992

### பெரியான் சசிகலராணி (சசி)

### 07 - 01 - 1993

சீரிய நெற்றி எங்கே
சிவந்த நல் இதழ்கள் எங்கே
கூரிய விழிகள் எங்கே
சிறு நகை போன தெங்கே
நேரிய அறிவு எங்கே
நிமிர்ந்த நல் நடைதான் எங்கே?
நிலமெலாம் வணங்கும் தோற்றம்
நெருப்பினில் வீழ்ந்ததிங்கே!

எமது இல்லத்தில் (07-01-1993) இன்று நடைபெறும் கிரியைகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தாமு வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

- குடும்பத்தினர்

[3939]

உன் பாதம் எங்க வென்று
ஈழ மண்ணும் ஏங்குதடா...
உன் பாதம் நடந்த இடம்
செங்குருதி பாயுதடா......
தமிழ் மண்ணை மீட்கவென்று
''கதிரவனாய்'' மலர்ந்தாயடா
கதிரவனான உனைக் கண்டு
களிப்புற்ற ஈழ மண்ணும்
கதிரவனின் ஒளி இன்றி
உன் குருதி காயவில்லை
எழுவை தீவில் நீ பிறந்தாயடா
எழுந்தமிழர் வாழவென்று
உன் மண்ணை காக்க வென்று
உன் உயிரை ஈய்ந்தாயடா
மாவீரர் வழி என்று இவ்
உலகை மறந்தாயடா
உன் மறைவு இப்போது
கதிரோடு சேர்ந்ததடா
உன் பணியை தொடர்வதற்கு
ஓராயிரம் ''கதிரவர்கள்'' உதிப்பாரடா.

உன்பிரிவால் துயருறும்
அன்பு நெஞ்சங்கள்

தீவகம்
(3936)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்: 1973 — 08 — 19



வீரச் சாவு: 1992 — 11 — 24

### வீரவேங்கை பாக்கியம்

[அரசரத்தினம் வனஜா]

வேலணைத்துறையூர்

[பலாலியில் பத்தைமேனி என்னும் இடத்தில் 24. 11. 92 அன்று நடைபெற்ற நேரடி மோதலில் வீரச் சாவடைந்தார்.]

மார்பில் விழுப்புண் பெற்று மரணிக்கும்
வீரமறக்குலத்தில் வந்துதித்த- மறக்குல மாதர்மணியே
வரலாறு படைத்த தமிழீழத்தில் காவிய நாயகியே
தமிழீழத்தை மீட்பதற்காய் தரணியில் மரித்தவளே

உன் வீரப்பயணத்தை உடன்
சகோதரன் தொடர்ந்திட நீர்
சிந்திய குருதியில் ஈழ அன்னை முகம் மலர்ந்து
எழுவாள் - அதுவரை எமது இதய அஞ்சலிகள்

''இவருடன் வீரச்சாவைக் தழுவிக் கொண்ட
அனைதது வீரவேங்கைகளையும் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.''

- பெற்றோர், சகோதரர்கள்

வேலணை கிழக்கு.

(சி-5692)

### சிந்தனைக்கு

கற்பாறையை விட கடினமானது, எது?
நீரின் மென்னலையை விட மென்மையானது, எது?
எனினும், மென்மையான நீரால் கூட கற்பாறை குழிவாகும்.

— ஓவிட்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 07-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## வெகுசனப் போர்

நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து மாபெரும் மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளனர். தமிழர்களுக்கு எதிராகக் கடந்த 32 மாதகாலமாக விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடையை நீக்குதல், மக்களின் அடிப்படைத் தேவையான உணவு, உறைவிடம், சுகாதாரம், கல்வி போன்றவற்றிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை தங்குதடையின்றி அனுப்புதல், பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை அகற்றி குடாநாட்டிற்கான போக்குவரத்துப் பாதையைத்திறந்து விடுதல், யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல், ஆகியவையே, வெகுசன அமைப்புக்களின் நான்கு அம்சக் கோரிக்கைகளாகும்.

வெகுசன அமைப்புக்கள் நடைமுறைப்படுத்தக் கோரும் இந்த நான்கு அம்சங்களும், சிங்கள அரசாங்கத்தினால், திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டவையும், கடைப்பிடிக்கப்பட்டு வருபவையும் ஆகும். இந்த திட்டமிட்ட அடக்குமுறை எதிராக வெகுசனப் போராட்டங்களைத் தமிழ்மக்களின் அமைப்புக்கள் நடத்த முன்வந்துள்ளமை மக்களின் உளக்கிளர்ச்சியை வெளிக்காட்டும் ஓர் அம்சமாகும். இவ்வகையான போராட்டங்கள் வரவேற்கப்படக் கூடியவையும் ஆகும்.

இதேவேளை தமிழ் மக்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டம் சாத்வீக போராட்டமாக உருவாகி வெகுஜனப் போராட்டங்களாகமாறி ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய நிலையில் மீண்டும் வெகுசனப் போராட்டங்களை நடத்துவது தேவைதானா? இதனால் எந்தளவிற்கு நன்மைகள் விளையும் என்னும் கேள்விகள் எழுப்பப்படுவதுண்டு.

இக் கேள்வியில் சில அர்த்தங்கள் இருப்பினும் ஆயுதப் போராட்டம் நடத்தும் ஓர் இனம் வெகுசனப் போராட்டத்தை நடத்துவதில் பயனேதுமில்லை என வாதிடுவது ஏற்புடையதல்ல. ஆயுதப்போராட்டம் என்பது எவ்வாறு ஓர் போராட்ட வடிவமோ அதேபோன்று வெகுசனப்போராட்டங்களும் ஒரு தனி வடிவமாகும்.

அத்தோடு ஆயுதப் போராட்டத்தில் தமக்குள்ள இடர்பாடுகளினால் சிலர் பங்காற்ற இயலா

# 'குப்பை' மலிவில் ஆயுதங்கள் சிறிலங்காவால் கொள்வனவு

(கொழும்பு)

வார்சோ உடன்படிக்கையின் வீழ்ச்சி மற்றும் கிழக்கு - மேற்கு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்து ஆகியவற்றை அடுத்து சந்தையில் உபரியாக ஆயுதங்கள் குவிந்திருப்பது எமக்குச் சாதகமாக இருப்பதுடன் டாங்கிகளையும் ஹெலிகொப்டர்களையும் நாம் 'குப்பை மலிவுக்கு' வாங்கியிருக்கிறோம் என்று இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் இரகசியப் பேச்சுக்களை நடத்தி வருகிறது என்ற வதந்தி ஒருபுறம் இருக்க, அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட போர் விமானம், தாக்குதல் ஹெலிகொப்டர்கள் மற்றும் அதிவேக பீரங்கிப் படகுகள் போன்ற நவீனரகமான ஆயுதங்கள் வந்து சேரும் வரை இராணுவம் காத்திருக்கிறது என்பதுதான் உண்மை. இதன் பிறகு இவற்றைப் பயன்படுத்தி புலிகளுக்கு எதிரான உக்கிரமமான நடவடிக்கைகளை மேற்கொண்டு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம்.

கடந்த இரண்டு வருடங்களாக மேலும் கூடுதலான ஹெலிகொப்டர்கள், போக்குவரத்து விமானங்கள், ஜெட் விமானங்கள், டாங்கிகள் மற்றும் பீரங்கிப் படகுகளை இராணுவத்துக்காக நாம் பெற்றிருக்கின்றோம். இலங்கை உள்நாட்டுப் போரின் 'தொழில்நுட்ப மட்டம்' கடந்த ஒரு தசாப்த காலத்தில் கடுமையாக உயர்ந்து விட்டது. அத்துடன் சண்டைகளும் பெரியவையாகி விட்டன.

கடந்த வருடத்தில் இராணுவ நடவடிக்கையில் மந்த நிலை காணப்பட்டதால் இரகசியப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது என்றஊகம் இருந்தது. ஆனால் பாதுகாப்புத்துறை அவதானி ஒருவர் கருத்துத் தெரிவிக்கும்போது மாரியில் மந்த நிலை இருப்பது வழமைதான். அத்துடன் புலிகளும் இராணுவமும்சோர்ந்து விட்டனர் என்று சொன்னார்.

இப்போது பாதுகாப்புப் படைகளின் பலம் அதிகரித்து விட்டது. 1983 இல் வடக்கு - கிழக்கு போரின் ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்தில் 12 ஆயிரம் பேர் மட்டும் இருந்தனர். ஆனால் தற்போது 1 இலட்சத்து, 80 ஆயிரம்பேர் பாதுகாப்புப் படைகளிலிருக்கிறார்கள் அதைவிட ஆர்ஜன்டீனாவிடம் இருந்து போர் விமானமொன்றையும், ரஷ்ய போக்குவரத்து ஹெலிகொப்டர்களையும் கொள்வனவு செய்திருக்கிறது. யுத்த முனையில் இராணுவத்தின் தந்திர நடமாட்டத்தை இந்த விமானமும், ஹெலிகொப்டர்களும் அதிகரிக்குமெனவும் அத்துடன் நிதிப் பற்றாக்குறை இருப்பதையும் அந்த அதிகாரி ஒப்புக் கொண்டார்.

# பிரேமதாசாவின் பேச்சுக்கள் வெறும் அரசியல் கேலிக்கூத்துகள்

**- நவசமசமாஜ பொதுச் செயலர் கண்டனம்**

(கொழும்பு)

இந்நாட்டின் இனப்பிரச்னைக்கு தீர்வு காண ஒரு சில வார்த்தையைக்கூட முன்வைக்காத சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பிரச்சினைக்கு வெகுவிரைவில் அரசியல் தீர்வு காணப் போவதாகக் கூறிவருகிறார். பலகோடி ரூபா செலவில் தொடர்ந்து யுத்தத்தை நடத்திவரும் இந்த அரசாங்கம் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்போவதாகக் கூறுவது வெறும் கேலிக் கூத்தாகும்.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற நவசம சமாஜக் கட்சியின் 15 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றுகையில் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; இந்த நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கிறது இன்றைய வடக்கு-கிழக்கு யுத்தம். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாட்டை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்வது என்று கூறுவது வெறும் பகற் கனவாகும்.

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை, சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் ஐக்கியத்தின் மூலமே நாட்டில் அமைதியைக் கொண்டுவர முடியும். தென்னிலங்கையில் இத்தகையதொரு மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைத்தீர்வு சாத்தியமாகும். இத்தகைய மாற்றத்திற்கு தற்போதைய அரசியல் அமைப்பு முறையில் வழியே இடையாது.

ஒருவருடத்திற்கு மேலாக ஆமைவேகத்தில் செயல்பட்டு ஏழு தமிழ்க்கட்சிகள் சமர்ப்பித்த நான்கு அம்சத்திட்டத்தை உதாசீனம் செய்து விட்டு எங்கிருந்தோ வந்த ஸ்ரீனிவாசன் கொண்டுவந்த சமஷ்டித் திட்டத்தை ''இது போல் உண்டோ தீர்வுத்திட்டம்'' என்று போற்றுகிறது.

ஸ்ரீனிவாசனின் தீர்வுத்திட்டத்தை எந்தவொரு தமிழ்கட்சியும் - ஏன் அமைச்சரவையில் உள்ள தமிழ் அமைச்சர்கள் கூட ஏற்கமறுத்து விட்டனர்.

முனசிங்கா தலைமையிலான தெரிவுக்குழுவும் ஸ்ரீனிவாசனின் தீர்வுத்திட்டமும் சேர்ந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரித்ததே கண்டமிச்சமாகும். இந்த நாட்டினதும் எதிர்கால சந்ததியினரதும் நலன்கருதி இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றார்.

சுதந்திரக் கட்சிக்குள்

# ஜனநாயகம் இன்மையே பிரச்சினைக்குக் காரணம்

**-மகிந்த ராஜபக்ச**

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஜனநாயகம் இல்லாததினால் தான் கட்சிக்குள் சகல பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் உதவிச் செயலாளர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கரங்களில் சகல அதிகாரங்களும் கொடுக்கப்படுவது ஜனநாயக விரோதமானது என்றும் அவர் குறிப்பிட்டார். கட்சியில் நீண்டகாலமாக தெரிவுகள் நடைபெறவில்லை. 1981 ஆம் ஆண்டில் கட்சியின்மாநாடு இறுதியாக நடைபெற்றது. ஆனால் தெரிவுகள் நடைபெறவில்லை. உலக ஒப்பந்தம் ஒன்றின் பெயரில் அனுராவின் பெயர் பிரேரிக்கப்பட்டது. நான் உட்பட எந்த ஒரு அலுவலாளர்களின் பெரும் அங்கத்துவத்தால் தெரிவு செய்யப்படவில்லையென சிங்களவாராந்தப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

சுங்கத்திணைக்களத்திற்கு

# தகவல் கொடுத்தோருக்கு 22 கோடி ரூபா சன்மானம்

(கொழும்பு)

கடத்தல் மற்றைய தகவல்களை வழங்கிய 165 பேருக்கு 22 கோடி ரூபாவை சிறிலங்கா அரசு சன்மானமாக வழங்கியுள்ளது.

சுங்கப் பகுதியினரின் கண்களுக்குள் மண்ணைத் தூவி இலங்கைக்குள்...

# தமிழரான விஞ்ஞான பீடாதிபதியை

ளனர். தமிழர்களுக்கு எதிராகக் கடந்த 32 மாதகாலமாக விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடையை நீக்குதல். மக்களின் அடிப்படைத் தேவையான உணவு, உறைவிடம், சுகாதாரம், கல்வி போன்றவற்றிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை தங்குதடையின்றி அனுப்புதல், பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை அகற்றி குடாநாட்டிற்கான போக்குவரத்துப் பாதையைத்திறந்து விடுதல், யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல், ஆகியவையே, வெகுசன அமைப்புக்களின் நான்கு அம்சக் கோரிக்கைகளாகும்.

வெகுசன அமைப்புக்கள் நடைமுறைப்படுத்தக் கோரும் இந்த நான்கு அம்சங்களும், சிங்கள அரசாங்கத்தினால், திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டவையும், கடைப்பிடிக்கப்பட்டு வருபவையும் ஆகும். இந்த திட்டமிட்ட அடக்குமுறை எதிராக வெகுசனப் போராட்டங்களைத் தமிழ்மக்களின் அமைப்புக்கள் நடத்த முன்வந்துள்ளமை மக்களின் உளக்கிளர்ச்சியை வெளிக்காட்டும் ஓர் அம்சமாகும். இவ்வகையான போராட்டங்கள் வரவேற்கப்படக் கூடியவையும் ஆகும்.

இதேவேளை தமிழ் மக்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டம் சாத்வீக போராட்டமாக உருவாகி வெகுஜனப் போராட்டங்களாகமாறி ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய நிலையில் மீண்டும் வெகுசனப் போராட்டங்களை நடத்துவது தேவைதானா? இதனால் எந்தளவிற்கு நன்மைகள் விளையும் என்னும் கேள்விகள் எழுப்பப்படுவதுண்டு.

இக் கேள்வியில் சில அர்த்தங்கள் இருப்பினும் ஆயுதப் போராட்டம் நடத்தும் ஓர் இனம் வெகுசனப் போராட்டத்தை நடத்துவதில் பயனேதுமில்லை என வாதிடுவது ஏற்புடையதல்ல. ஆயுதப்போராட்டம் என்பது எவ்வாறு ஓர் போராட்ட வடிவமோ அதேபோன்று வெகுசனப்போராட்டங்களும் ஒரு தனி வடிவமாகும்.

அத்தோடு ஆயுதப் போராட்டத்தில் தமக்குள்ள இடர்பாடுகளினால் சிலர் பங்காற்ற இயலாமல் இருக்கலாம். அவர்கள் வெகுசனப் போராட்டத்தில் பங்குபற்றக் கூடியதாக இருக்கும். மேலும் வெகுசனப் போராட்டங்களே மக்களின் ஒட்டுமொத்தமான எதிர்ப்பை உலகிற்குக் காட்டுவதாகும். மக்கள் யாவரும் அரசிற்கு எதிராக அணிதிரண்டுள்ளனர் என்பதை உலகிற்கு வெளிக்காட்டுபவையாகும்.

இதனை இன்று ஆயுதப் போராட்டங்கள் நடைபெறும் உலகின் ஏனைய பாகங்களிலும் காணலாம். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இஸ்ரேலியர்களின் பயங்கர அடக்குமுறையின் கீழ் உள்ள பாலஸ்தீனியர்கள் கூட தமது வெகுசனப் போராட்டங்களை கைவிட்டு விடவில்லை, அத்தோடு இப்போராட்டங்களில் ஆயுதப் போராட்டத்தில் பங்குபற்றாத சிறுவர்களும், வயோதிபப் பெண்மணிகளும் பெருமளவில் பங்குபற்றுவதையும் காணலாம.

இதேவேளை வெகுசனப் போராட்டங்களை அடக்குமுறையாளர் இரும்புக்கரம் கொண்டு நசுக்குவதோடு, அவற்றைக் கவனத்தில் கொள்ளாமலும் இருப்பார்களேயானால் அதன் விளைவுகளை விரைவிலேயே முழுமையான ஆயுதப்போராட்டவடிவில் சந்திக்க வேண்டியநிலை ஏற்பட்டுவிடும். இதுவே வரலாற்றின் படிப்பினை. கடந்தகாலத்தில் தமிழர் நடத்திய சாத்வீகப்போராட்டங்களும், வெகுசனப் போராட்டங்களும் கருத்திற்கொள்ளப்பட்டிருக்குமானால் இலங்கையில் இன்றைய நிலை இருக்க மாட்டாது. இந்நிலையில் வெகுசனப் போராட்டம் என்பது சக்தியற்றதொன்றல்ல. மக்கள் உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓர்போராட்ட வடிவம். இதில் மக்கள் பங்குகொள்வதென்பதும் அடக்குமுறைக்கு எதிரான ஓர் எழுச்சியே.

---

விமானம், தாக்குதல் ஹெலிகொப்டர்கள் மற்றும் அதிவேக பீரங்கிப் படகுகள் போன்ற நவீன ரகமான ஆயுதங்கள் வந்து சேரும் வரை இராணுவம் காத்திருக்கிறது என்பதுதான் உண்மை. இதன் பிறகு இவற்றைப் பயன்படுத்தி புலிகளுக்கு எதிரான உக்கிரமமான நடவடிக்கைகளை மேற்கொண்டு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம்.

கடந்த இரண்டு வருடங்களாக மேலும் கூடுதலான ஹெலிகொப்டர்கள், போக்குவரத்து விமானங்கள், ஜெட்

---

**– நவசமசமாஜ பொதுச் செயலர் கண்டனம்**

(கொழும்பு)

இந்தநாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஒரு சில வார்த்தையைக்கூட முன்வைக்காத சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பிரச்சினைக்கு வெகுவிரைவில் அரசியல் தீர்வு காணப் போவதாகக் கூறிவருகிறார். பலகோடி ரூபா செலவில் தொடர்ந்து யுத்தத்தை நடத்திவரும் இந்த அரசாங்கம் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்போவதாகக் கூறுவது வெறும் கேலிக்கூத்தாகும்.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற நவசம சமாஜக் கட்சியின் 15 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றுகையில் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; இந்த நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கிறது இன்றைய வடக்கு-கிழக்கு யுத்தம். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாட்டை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்வது என்று கூறுவது வெறும் பகற் கனவாகும்.

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை, சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் ஐக்கியத்தின் மூலமே நாட்டில் அமைதியைக் கொண்டுவர முடியும். தென்னிலங்கையில் இத்தகையதொரு மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைத்தீர்வு சாத்தியமாகும். இத்தகைய மாற்றத்திற்கு தற்போதைய அரசியல் அமைப்பு முறையில் வழியே இடையாது.

ஒருவருடத்திற்கு மேலாக ஆமைவேகத்தில் செயல்பட்டு ஏழு தமிழ்க்கட்சிகள் சமர்ப்பித்த நான்கு அம்சத்திட்டத்தை உதாசீனம் செய்துவிட்டு எங்கிருந்தோ வந்த ஸ்ரீனிவாசன் கொண்டுவந்த சமஷ்டித் திட்டத்தை "இது போல் உண்டோ தீர்வுத்திட்டம்" என்று போற்றுகிறது.

ஸ்ரீனிவாசனின் தீர்வுத்திட்டத்தை எந்தவொரு தமிழ்கட்சியும் - ஏன் அமைச்சரவையில் உள்ள தமிழ் அமைச்சர்கள் கூட ஏற்கமறுத்து விட்டனர்.

முனசிங்கா தலைமையிலான தெரிவுக்குழுவும் ஸ்ரீனிவாசனின் தீர்வுத்திட்டமும் சேர்ந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் கண்டமிச்சமாகும். இந்த நாட்டினதும் எதிர்கால சந்ததியினரதும் நலன்கருதி இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றார்.

---

சுதந்திரக் கட்சிக்குள்

## ஜனநாயகம் இன்மையே பிரச்சினைக்குக் காரணம்

-மகிந்த ராஜபக்ச

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஜனநாயகம் இல்லாததினால் தான் கட்சிக்குள் சகல பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் உதவிச் செயலாளர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கரங்களில் சகல அதிகாரங்களும் கொடுக்கப்படுவது ஜனநாயக விரோதமானது என்றும் அவர் குறிப்பிட்டார். கட்சியில் நீண்டகாலமாக தெரிவுகள் நடைபெறவில்லை. 1981 ஆம் ஆண்டில் கட்சியின்மாநாடு இறுதியாக நடைபெற்றது. ஆனால் தெரிவுகள் நடைபெறவில்லை. உலக ஒப்பந்தம் ஒன்றின் பெயரில் அனுராவின் பெயர் பிரேரிக்கப்பட்டது. நான் உட்பட எந்த ஒரு அலுவலாளர்களின் பெரும் அங்கத்துவத்தால் தெரிவு செய்யப்படவில்லையென சிங்களவாராந்தப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

---

சுங்கத்திணைக்களத்திற்கு

## தகவல் கொடுத்தோருக்கு 22 கோடி ரூபா சன்மானம்

(கொழும்பு)

கடத்தல் மற்றைய தகவல்களை வழங்கிய 165 பேருக்கு 22 கோடி ரூபாவை சிறிலங்கா அரசு சன்மானமாக வழங்கியுள்ளது.

சுங்கப் பகுதியினரின் கண்களுக்குள் மண்ணைத் தூவி இலங்கைக்குள் பொருள்களைக் கடத்திவரும் கடத்தல்காரர்களைக் கண்டுபிடிக்க தகவல் கொடுத்தமைக்காக கடந்த ஆண்டு 165 பேருக்கு சன்மானம் வழங்கப்பட்டது. இவர்களுக்கு சுமார் 22 கோடி ரூபா சன்மானமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவலை சுங்கத்திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## தமிழரான விஞ்ஞான பீடாதிபதியை பதவி நீக்க கோரிக்கை

- கொழும்பு பல்கலை. மாணவர் மகஜர்

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக் கழக விஞ்ஞான பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் கே. டி. அருள்பிரகாசத்தை அப்பதவியிலிருந்து நீக்குமாறு விஞ்ஞான பீட மாணவர் சங்கம் கோரியுள்ளது. அண்மையில் இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட இவருக்கு எதிராக ஏழு குற்றச்சாட்டுகள் அடங்கிய மகஜர் ஒன்றை விஞ்ஞான மாணவர் சங்கம் துணை வேந்தரிடம் கையளித்துள்ளது.

பல்கலைக் கழகப் பரீட்சைப் பிரமாணங்கள் தொடர்பாகத் தவறான அறிவுகளை செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களுக்கு பேராசிரியர் அருள்பிரகாசம் வழங்கியதாக அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் தலைமையில் இடம்பெற்ற விஞ்ஞான பீடக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை அவர் தட்டிக் கழிப்பதாகவும், டிசம்பர் 2-ம் திகதி இடம்பெற்ற பீடக் கூட்டத்தில் மாணவர் பிரதிநிதிகள் கலந்து கொள்ளத் தடையாக இருந்ததாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், அந்த மகஜரில் பேராசிரியர் அருட்பிரகாசம் மாணவர் சங்கப் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்துக் குறைகளை எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் வழங்காது அலுவலகத்தில் இல்லாது நழுவி விடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களை இவர் பயங்கரவாதிகள் என்று முத்திரையிட எத்தனிக்கும் வகையில் நடந்து கொண்டதாகவும், அவரைப் பதில் பீடாபதி பதவியிலிருந்து விலக்குமாறு அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

---

## ஐக்கிய முன்னணி அமைக்க சுத.கட்சிமத்தியகுழு இணக்கம்

(கொழும்பு)

தேர்தல் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி மத்திய குழு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, மகாஜன எக்ஸத் பெரமுன உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் இந்தத் தேர்தல் கூட்டில் சேர்ந்துள்ளன. அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய முன்னணி இந்தத் தேர்தல் கூட்டில் சேராமல் தனித்தியங்கவுள்ளது.

கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் வரும் 11 - ஆம் திகதி சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சென்ற மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரித்த காரணத்தால் எதிர்க்கட்சிகள் கூடி பொது வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல்கள் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அப்படி ஏற்பட்டால் கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாசக் கட்சியும் தனியாகத் தேர்தல் ஐக்கிய முன்னணி அமைக்கும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் பாலசுப்பிரமணியம் (துரை)

(சரஸ்வதி பேக்கரி உரிமையாளர், கொடிகாமம்.)

செருடாவிலைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ச. பாலசுப்பிரமணியம் 2-1-93 அன்று அகாலமரணமானார். இவர் பாக்கியம், காலஞ்சென்ற சதாசிவம் ஆகியோரின் மகனும், சரஸ்வதியின் அருமைக் கணவரும், நந்தகுமார் (ஜேர்மனி), செல்வகுமார் (பிரான்ஸ்), சிவகுமார், பாலசிரோஜினி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், பொன்ராசா (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-01-1993 காலை 10 மணியளவில் கொடிகாமம் / கட்டைபறிப்பான் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

மனைவி, பிள்ளைகள்

## இராசசிங்கம் செல்லத்துரை

நாக்கிரியைச் சேர்ந்த இராசசிங்கம் செல்லத்துரை 02-01-93 அன்று கிளாலிக் கடலில் இடம்பெற்ற தாக்குதலில் அகால மரணமானார் இவர் சிவகாமியம்மாவின் (செல்வந்தி) அன்புக் கணவரும், சிவசெல்வரஞ்சினி (சுவிஸ்), சிவசெல்வரஞ்சன் (சுவிஸ்), சிவசெல்வரஜன், சிவசெல்வயோகநாதன், சிவசெல்வதங்கேஸ்வரன், ரங்கராணி (ரமணி - சுவிஸ்), சிவசெல்வராகவன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவபாலசிங்கம் (சுவிஸ்) ஞானகுலசிங்கம் (சுவிஸ்), சுமதி, ஞானசேகரம் (காந்தி-சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், பிரசாந், துவாகரன் (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்), லபோதாரணி (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-01-93 அன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் நிலாவரை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புத்தூர். [3947]

தகவல்: மனைவி

## திருமதி சிவசம்பு கமலாட்சி

அச்சுவேலி தெற்கை சேர்ந்த திருமதி சிவசம்பு கமலாட்சி 6-1-93 அன்று காலமானார். இவர் சி. சிவசம்பு (இளைப்பாறிய ஆசிரியர்) வின் அன்பு மனைவியும், பவானந்தன், யோகேஸ்வரி, சரவணபவானந்தன் (கனடா), கருணானந்தன் [சுவிஸ்], ஆறுமுகானந்தன் [உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்], குகேந்திரன் [கனடா] ஆனந்தசுந்தரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், மனோன்மணிதேவி, இராசதுரை (வருமானவரி கந்தோர், கொழும்பு), சவுந்தரநாயகி (ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி), லிங்கராணி, பரமேஸ்வரி, சரசமாலா (கனடா), அனுஷியா (லண்டன்) ஆகியோரின் மாமிமாரும், சண்முகானந்தன் (லண்டன்), காலஞ்சென்ற சரவணானந்தன், சிவறமணன், இராசேஸ்வரன், (லண்டன்), கமலேஸ்வரன், சிவகுமார், சுபத்திரா, தஷ்சாயினி, தயானி, செந்தூரன், அபிராமி, அபர்ணா, அரனிந் (கனடா), பிரணவன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (7-1-93) இன்று அச்சுவேலி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

# வீரவணக்கம்



## லெப். அமுதநிலான் (பிரதாப்)

05-01-1993 அன்று மட்டக்களப்பில் லெப்டினன்ட் அமுதநிலான் / பிரதாப் [கணபதிப்பிள்ளை அருள்நாயகம்- எருவில், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு] என்னும் விடுதலைப் புலிகள் போராளி சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.



## வீரவேங்கை கம்பன் (ஜெசி)

04-01-1993 அன்று யாழ். மாவட்டத்தில் வீரவேங்கை கம்பன் / ஜெசி [சின்னையா நித்தியேஸ்வரன் - முறிகண்டி கிளிநொச்சி] என்னும் விடுதலைப் புலிகள் போராளி சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.

இந்த இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நாச

எழவில்லை. மக்கள் ஏற்கனவே தகவல் கொடுத்திருப்பின் இப்படியான நாசகார செயல்கள் நடைபெறாது தடுத்திருக்க முடியும். அவர்கள் அதுபற்றி தெரிவிக்காததால் அவர்களது கண்காணிப்பு பயனற்றதாகி விட்டது.

சிறிலங்கா உளவாளிகள் இந்த மண்ணில் உள்ள தேச விரோதிகளைப் பயன்படுத்தியே தமிழ் மக்களை அழித்துவிட கங்கணம் கட்டி நிற்கின்றனர். இதற்கு கடந்த கால நிகழ்வுகள் சான்று பகர்கின்றன.

உதாரணமாக அண்மையில் வவுனியா சென்று வரும் இரு வியாபாரிகளிடம் இராணுவ உளவாளிகள் தமிழ் மக்களை அழிக்கும் நோக்குடன் மாவிற்குள் மறைத்து வைத்து வெடிப்பொருள்களை வட பகுதிக்குள் அனுப்பிவைத்தமையை குறிப்பிடலாம். அவை அவ் வியாபாரிகளால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டன. இது தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சியால் கண்டுபிடிக்கபபட்டது.

மேலும் கடந்த வருடம் இத்தகைய தேச விரோதிகளின் நாசகார செயல்களினால் கொம்படிப் பகுதியில் பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பதினைந்து பேர் வரை படுகாயமடைந்ததும தெரிந்ததே. அத்துடன் ஓமந்தையில் மாணிக்கவளவு, யாழ். பிரதான பஸ் நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ் இந்துக்கல்லூரி மைதானப் பகுதிகளில் இத்தகைய குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றமை தெரிந்ததே.

சிறிலங்கா உளவாளிகள் இப்படியான தமது செயற்பாடுகளுக்காக இங்குள்ள பல தரப்பட்டவர்களையும் வயது வேறுபாடு இன்றியும் பால் வேறுபாடு இன்றியும் பயன்படுத்துகின்றனர். இத்தகவல்கள் அண்மையில் எம்மால் கைது செய்யப்பட்ட சில தேச விரோதிகள் மூலம் எமக்கு தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட வயதுடையவர்கள் மட்டும் இத்தகைய நாசகார செயலில் ஈடுபடுவதில்லை. இவர்கள் பல்வேறு மட்டங்களிலும் இருந்துசெயற்பட்டுள்ளனர். இவர்கள் உயர் பதவிவகிப்பவர்களாகவோ, வயது கூடியவர்களாகவோ இருக்கலாம். இதனை மக்களுக்கு இனம் காட்டுவதற்காக சிறிலங்கா உளவாளிகளுக்கு துணை போன சிலரது பெயர் விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு. கொக்குவிலைச் சேர்ந்த படைவீரசிங்கம் கதிரவேலு (வயது 46) இவர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை சிரேஷ்—

# புலிகளின் தாக்குதலுக்கு 2 படையினர் பலி

(கொழும்பு)

நேற்று முன்தினம் பலாலி முகாமின் காவல்அரண் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு இராணுவ சிப்பாய்கள் பலியானதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

பலர்

வர்கள் படுகாயமடைந்து துடிதுடித்துக் கொண்டிருந்தனர். இவர்களின் உடல்களில் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்து கொண்டிருந்தது.

இரு விமானங்களும் சுமார் முப்பது நிமிடங்கள் பேரிரைச்சலுடன் பல தடவை சுழன்று சுழன்று தாக்குதல் நடாத்தியவண்ணமிருந்தன. இந்த உறுமல் ஒலிகளுக்குமத்தியிலும் காயமடைந்தவர்களின் அலறல் ஒலிகள் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கேட்டவண்ணமிருந்தன. இவ்வாறான சத்தங்களுடன் இடைவிடாத குண்டுச்சத்தங்களும் இணைந்து கொண்டு ஒரு யுத்த பூமியை கொணைக்களத்தை ஞாபகமூட்டியது என்றார். (க)

வாகனங்களை

வாங்குபவரின் குடும்ப அட்டையை பெற்று உறுதிப்படுத்தியபின் அதன் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். இதேபோல பொதுமக்கள் தமக்கிடையே வாகனங்களை விற்பனை செய்கின்றபோது வாங்குவோர், விற்போர் இருவரது குடும்ப அட்டை இலக்கங்களையும் வழங்குகின்ற உறுதிச்சீட்டில் குறிப்பிடுதல் வேண்டும் என்றார்.

அத்துடன் இவை எங்கு பதிவு செய்யப்படல்வேண்டும், எவ்வாறு பதிவு செய்யப்படல் வேண்டும் போன்ற விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முகாம்களிலும், காவல்துறை பணிமனைகளிலும் மற்றும் இயக்க உறுப்பினர்கள் என இனம்காணும் பட்சத்தில் அவர்களிடமும் வழங்கலாம் என அவர் தெரிவித்தார்.

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 05.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7539

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

42-3924, 22-5857, 42-9220, 28-1706, 24-4917, 41-9167, 26-2277, 26-0649, 28-1308, 28-1020, 22-8835.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

42-9325, 42-1722, 28-0940, 24 6243, 24-0098, 27-9327, 24-5121, 26-2135, 26-0495, 42-1464, 41-5979, 26-1791, 26-3495, 40-7299, 24-0521, 28-1928.

## 06.01 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 7555

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-1583, 24-2680, 26-8427, 28-2156, 26-0691.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5416, 22-4895, 26-9145, 41-6296, 26-1285, 24-7087, 27-8999, 24-4985, 42-6452, 26-9703.

# 45ஆம்நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்: 15



வீரச்சாவு: 23

நாக்கிரியைச் சேர்ந்த இராசசிங்கம் செல்லத்துரை 02-01-93 அன்று இளாலிக் கடலில் இடம்பெற்ற தாக்குதலில் அகால மரணமானார் இவர் சிவகாமியம்மாவின் (செல்வந்தி) அன்புக் கணவரும், சிவசெல்வரஞ்சினி (சுவிஸ்), சிவசெல்வரஞ்சன் (சுவிஸ்), சிவசெல்வராஜன், சிவசெல்வயோகநாதன், சிவசெல்வதாஸ்சேஸ்வரன், ரங்கராணி (ரமணி - சுவிஸ்), சிவசெல்வராகவன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவபாலசிங்கம் (சுவிஸ்) ஞானகுலசிங்கம் (சுவிஸ்), சுமதி, ஞானசேகரம் (காந்தி-சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், பிரசாந், துவாகரன் (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்), லபோதாரணி (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-01-93 அன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் நிலாவரை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புத்தூர். தகவல்:
[3947] மனைவி

## திருமதி சிவசம்பு கமலாட்சி

அச்சுவேலி தெற்கை சேர்ந்த திருமதி சிவசம்பு கமலாட்சி 6-1-93 அன்று காலமானார். இவர் சி. சிவசம்பு (இளைப்பாறிய ஆசிரியர்) வின் அன்பு மனைவியும், பவானந்தன், யோகேஸ்வரி, சரவணபவானந்தன் (கனடா), கருணானந்தன் [சுவிஸ்], ஆறுமுகானந்தன் [உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்], குகேந்திரன் [கனடா] ஆனந்தசுந்தரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், மனோன்மணிதேவி, இராசதுரை (வருமானவரி கந்தோர், கொழும்பு), சவுந்தரநாயகி (ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி), லிங்கராணி, பரமேஸ்வரி, சரசமாலா (கனடா), அனுஷியா (லண்டன்) ஆகியோரின் மாமிமாரும், சண்முகானந்தன் (லண்டன்), காலஞ்சென்ற சரவணானந்தன், சிவறமணன், இராசேஸ்வரன், (லண்டன்), கமலேஸ்வரன், சிவகுமார், சுபத்திரா, தஷ்சாயினி, தயானி, செந்தூரன், அபிராமி, அபர்னா, அரனிந் (கனடா), பிரணவன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (7-1-93) இன்று அச்சுவேலி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்;
அச்சுவேலி தெற்கு, சி. சிவசம்பு
அச்சுவேலி. [3949]

## ஏகாம்பரம் இரத்தினசபாபதி

[இளைப்பாறிய ஆசிரியர், வெவிமடை தமிழ் மகா வித்தியாலயம், மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்]

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், மானிப்பாயில் வசிப்பவருமாகிய ஏகாம்பரம் இரத்தினசபாபதி 4-1-93 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார், அன்னார் கமலாதேவி [ஆசிரியை, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்] அவர்களின் அன்புக்கணவரும் திருபதி ஞா ஸ்ரீகாந்தா [ஞானி] (ஆசிரியை, யாழ். இந்துமகளிர் கல்லூரி), காலஞ்சென்ற பரிபூரணன் [அமுதன்] (பொறியியலாளர்), இளபூரணன் [வரதன்] பொறியியலாளர் இங்கிலாந்து], ஞானபூரணன் [குகன்] நோர்வே], சிவபூரணன் [சிவா] [கட்டுபெத்த வளாகம்], ஞானகலா [ஞானா] (கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி), ஞானாம்பிகா [அம்பிகா] [கட்டுப்பெத்த வளாகம்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிறிகாந்தா [ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி], வனஜா [இங்கிலாந்து] ஆகியோரின் மாமனாரும் சுமித்திரா, நிரோசா, விபீசன் ஆகியோரின் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று [7-1 93] வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
29, மேதர் லேன், க. சிறிகாந்தா
மானிப்பாய். [3950]



### வீரவேங்கை கம்பன் (ஜெசி)

04-01-1993 அன்று யாழ். மாவட்டத்தில் வீரவேங்கை கம்பன் / ஜெசி [சின்னையா நித்தியேஸ்வரன் - முறிகண்டி கிளிநொச்சி] என்னும் விடுதலைப் புலிகள் போராளி சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.

இந்த இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### சித்தன்கேணி

டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பலர் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஏற்கனவே இடம்பெயர்ந்து மேற்படி பகுதிகளில் தங்கியிருந்தவர்களாவர்.

கமலாம்பாள் (வயது 48), உதயகுமார் (வயது 23), ஆனந்தம் என்று அழைக்கப்படும் சிவநாதன் (வயது45), கமலாம்பிகை (வயது 52) திருமதி நடராசா (வயது70), க. பிரேமதாஸ் [வயது 20] கெளரிபாலன் [வயது 22], வேலாயுதம் [வயது 44], க. லட்சுமிப்பிள்ளை [வயது 74] ஆகியோர் உட்பட பத்துப்பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

ஆ. சரவணபவான் (வயது 40), பொ. யோசப் (வயது50), சந்திரன் (வயது26) செ. வித்தியானந்தன் (வயது38), சந்திரகுமார் (வயது22), சுதாகரன் (வயது16), பூமணி வயது66), தி. சுபாசினி (வயது15) இவரது சகோதரி தி. தியாகினி [வயது 19], பொ. சிவசாமி [வயது50], சு. சதாசிவம் [வயது55], இ. ரஜீவ்குமார் [வயது13], ஜே. விவேகானந்தன், ச. சிவக்கொழுந்து [வயது27], சிவராசா [வயது 74] ஆகியோர் உட்பட மேலும் பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஒரு பகுதியினர் சங்கானை மருத்துவமனையிலும் ஏனையோர் யாழ் மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாசகார செயல்களினால் கொம்படிப் பகுதியில் பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பதினைந்து பேர் வரை படுகாயமடைந்ததும் தெரிந்ததே. அத்துடன் ஓமந்தையில் மாணிக்கவளவு, யாழ். பிரதான பஸ் நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ் இந்துக்கல்லூரி மைதானப் பகுதிகளில் இத்தகைய குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றமை தெரிந்ததே.

சிறிலங்கா உளவாளிகள் இப்படியான தமது செயற்பாடுகளுக்காக இங்குள்ள பல தரப்பட்டவர்களையும் வயது வேறுபாடு இன்றியும் பால் வேறுபாடு இன்றியும் பயன்படுத்துகின்றனர். இத்தகவல்கள் அண்மையில் எம்மால் கைது செய்யப்பட்ட சில தேசவிரோதிகள் மூலம் எமக்கு தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட வயதுடையவர்கள் மட்டும் இத்தகைய நாசகார செயலில் ஈடுபடுவதில்லை. இவர்கள் பல்வேறு மட்டங்களிலும் இருந்துசெயற்பட்டுள்ளனர். இவர்கள் உயர் பதவிவகிப்பவர்களாகவோ, வயது கூடியவர்களாகவோ இருக்கலாம். இதனை மக்களுக்கு இனம் காட்டுவதற்காக சிறிலங்கா உளவாளிகளுக்கு துணை போன சிலரது பெயர் விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு. கொக்குவிலைச் சேர்ந்த பண்டா வீரசிங்கம் கதிரவேலு (வயது 46) இவர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை சிரேஷ்ட சாலைப்பரிசோதகர். 17 ஆம் கட்டை வல்லிபுனம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வல்லிபுரம் சந்திரசேகரம் (சந்திரன்) (வயது32) இவர்ஓர் வியாபாரியாவார் பலாலிவீதி கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலைச் சேர்ந்த சின்னத்துரை சிறிதரன் [வயது39] இவர் வடபிராந்திய போக்குவரத்து சபை சாலைப்பரிசோதகர் ஆவார். 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த வியாபாரியான நடராசா [வயது38] கோப்பாய் தெற்கு கோப்பாயைச் சேர்ந்த வியாபாரியான வைரமுத்து சிவபாதம் [வயது40].

இவர்களது விபரங்களை கருத்தில் கொண்டு தேசவிரோத சக்திகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் இனங்காணவும் பொதுமக்கள் தாமதியாது தகவல்களை தந்துதவ வேண்டும் என்றார்.

கடந்தகால தேசவிரோதிகளின் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு பொதுமக்கள் இவர்களை இனம்காண சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோர், ஊருக்கு புதியவர்கள் என கருதுவோர் பற்றிய தகவல்களை அண்மையிலுள்ள விடுதலைப் புலிகளின்

இனம் காணும் பட்சத்தில் அவர்களிடமும் வழங்கலாம் என அவர் தெரிவித்தார்.

யுத்த பூமியை கொலைக் களத்தை ஞாபகமூட்டியது என்றார். (க)

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 05.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7539

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்
42-3924, 22-5857, 42-9220, 28-1706, 24-4917, 41-9167, 26-2277, 26-0649, 28-1308, 28-1020, 22-8835.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்
42-9325, 42-1722, 28-0940, 24 6243, 24-0098, 27-9327, 24-5121, 26-2135, 26-0495, 42-1464, 41-5979, 26-1791, 26-3495, 40-7299, 24-0521, 28-1928.

### 06.01 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 7555

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
26-1583, 24-2680, 26-8427, 28-2156, 26-0691.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24-5416, 22-4895, 26-9145, 41-6296, 26-1285, 24-7087, 27-8999, 24-4985, 42-6452, 26-9703.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்: 15 — 09 — 1971



வீரச்சாவு: 28 — 11 — 1992

### வீரவேங்கை நிதி
[தருமலிங்கம்உதயராணி]

உங்களின் குரல் கேட்டு
நாற்பத்தைந்து நாட்கள் நகர்ந்து போயிற்றா?
நம்பவே இயலவில்லை!
இம் மண்ணில் இலட்சியங்கள் ஈடேறும் வரையில்
தொடர்கிறோம் நும் வழியை!

சக போராளிகளையும், நண்பர்களையும் 07-01-93 இன்று வியாழக்கிழமை நடைபெறும் 45ஆம் நாள் நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தாய்: பரமேஸ்வரி
(வசாவிளான்) தம்பி: போராளி ரஞ்சித்
உரும்பராய் தெற்கு, சகோதர சகோதரிகள்
உரும்பராய். (சி-5720) உற்றார், உறவினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.